நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

# வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் (NITF), அக்ரஹார மருத்துவக் காப்புறுதி, மோட்டார் காப்புறுதி, போன்ற திட்டங்களை செயற்படுத்துவதற்குப் பொறுப்பான ஒரு முழுமையான அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். காப்புறுதித் துறையில் முன்னணியில் உள்ள தனியார் காப்புறுதியாளர்களிடமிருந்து கட்டாய மீள் காப்புறுதி அமர்வை ஏற்றுக்கொள்ளும் ஒரே மீள்காப்புறுதி நிறுவனமாகும். 18 வருடங்களுக்கும் மேலான அதன் இருப்பில் குறிப்பிடத்தக்க சாதனை, புதுமை, வளர்ச்சி மற்றும் இலாபம் என்பவற்றைக் கொண்டுள்ளது.
தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதிப் பொது முகாமையாளர் - காப்புறுதி (HM 2-1)**
**Deputy General Manager - Insurance**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

காப்புறுதி மற்றும் இடர் முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், காப்புறுதியில் வியாபார முகாமைத்துவம், வர்த்தகம், நிதி, சந்தைப்படுத்தலில் ஒரு பட்டம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பதவிக்கு இயைபான பாடப்பரப்போடு தொடர்புடைய ஏதாவது பட்டம்.

**அத்துடன்**

ஐக்கிய இராச்சிய பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் (Associate Membership) (ACII)

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முன்னைய சாதனைப் பதிவு சகிதம் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருக்க வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
2. பதவிக்குரித்தான விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ வகுதி (HM 1-3) பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**மற்றும்**

ஐக்கிய இராச்சிய பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் (Associate Membership) (ACII)

**சம்பள அளவு** : HM 2-1 -2025: ரூபா [161,140 - 12 x 4,850 – 219,340]

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

இந்த நியமனம் நிரந்தர நியமனமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

**சகல விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டச்சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2025-05-14ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**